உ

ஹிந்து சமய மன்றம்

திருக்கருகாவூர்

ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகா ஸமேத
ஸ்ரீ முல்லைவன நாதர் ஆலயம்
வரலாறு

அன்னை "ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை"

(பாலா தாஸன்)

காவிரியின் உபநதியான வெட்டாறு பாயும் பிரதேசத்தில் தஞ்சை ஜில்லாவிலுள்ள பாபநாசத்திலிருந்து நான்கு கல் தூரத்தில் சாலியமங்கலம் செல்லும் ரஸ்தாவில் அமைந்திருக்கும் திருக் கருகாவூர், பாடல்பெற்ற தலமாகும். இப்பெயர் காலக் கிரமத்தில் மருவி, மக்கள் இவ்வூரைத் "திருக்களாவூர்" என அழைக்கின்றனர். சைவசமயக் குரவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் கண்டுக் களித்துப் புகழ்ந்து பாடிய தலம். முல்லைக்காடு நிறைந்திருந்ததினால் முல்லைவனம் என்றும், அம் முல்லைக்கொடி நிறைந்த காட்டில் இருந்து கண்ட "ஸ்வயம்பு" லிங்கமாதலால், சுவாமிக்கு "மாதவீ வனேசுவரன்" என வடமொழியிலும், "முல்லைவன நாதர்" எனத் தமிழிலும் பெயராகும். அய்பனின் உடலில் (லிங்கத்தின் மீது) முல்லைக்கொடி சுற்றி ஏற்பட்ட தழும்புகளை இன்றும் காணலாம். ஸ்வாமிக்கு அபிஷேகமில்லை; புனுகு சட்டம்தான் அபிஷேகம்.

இங்குள்ள நவக்ரக சந்நிதியில் சூர்யனைச் சுற்றி மற்ற எட்டு மூர்த்திகளும் சூரியனை பார்த்தே நிற்கும் வடிவில் "அபய-வரத" முத்திரைகளுடன் காண்கின்றனர். அனுக்ர மூர்த்திகள்.

வானளாவும் கோபுரத்தை கடந்து கோயிலினுள்ளே நுழைந்து "முல்லைவன நாதரின்" சன்னிதிக்குள் நுழையும் முன், த்வஜஸ்தம் பத்தின் முன் அமர்ந்திருக்கும் நந்தியும் ஸ்வயம்புவே, உளிபடாது, தானுகவே ஏற்பட்ட சிலை. ஸகல லட்சணங்களும் பொருந்தியது.

உள்ளே நுழைந்ததும் வலதுபுறம் நவக்ரஹங்கள், நடராஜர் சந்நிதி, ஸ்வாமியின் கர்ப்பக்ரஹத்திற்கு முன் ''கர்ப்பக விநாயகர்'' காட்சி அளிக்கிறார். இவரும் உளிபடாத ஸ்வயம்பு மூர்த்தியே. அப்பனை தரிசனம் செய்துவைத்த திரு. ஞானஸ்கந்த சிவாச்சாரியார் அவர்களும், திரு. மகாதேவ சிவாச்சாரியார் அவர்களும் மிகவும் படித்தவர்கள். சிவாகமத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் சொன்னதிலிருந்து குஷ்டம் (Leprosy), வெண்குஷ்டம் (Lucoderma) முதலிய பூர்வஜன்ம வினைப்பயனால் ஏற்படும் வியாதிகள், மாதவி வனேசுவரர் கோவிலுக்கு வந்து, அவரை வினைதீர்க்கவேண்டி அவருக்குப் புனுகு சட்டம் சாத்தி அர்ச்சனை செய்வித்து வழிபடுவோருக்கு நிவர்த்தியாகிவிடுகிறது என்று தெரிகிறது. ஸ்வாமி ''பவரோக நிவாரணனாக'' இக்கலியுகத்தில் கண்கூடாக விளங்குகிறார்.

இவரது கருவறைக்குத் தெற்கே ஸோமாஸ்கந்தர் சந்நிதி. உற்சவ மூர்த்திகள் வெகு அழகு.

வெளிச்சுற்றின் தென்பாகத்தில் சந்தான ஆச்சாரியார், அறுபத்து மூவர், தட்சிணாமூர்த்தி, சாஸ்தா, விநாயகர்; மேற்கே மகாலட்சுமி. வடக்கே கிழக்குநோக்கி ஆறுமுகன் அழகிய மயிலின் மீது வள்ளி தேவசேனா சமேதனாகக் காட்சியளிக்கிறார். கண் கவரும் கற்சிலா மூர்த்திகள்.

வடக்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கி ''மகிஷாஸுரமர்த்தினி யாக'' அன்னை துர்க்கை தரிசனம் தருகிறாள். மிகவும் கம்பீரமான மூர்த்தி.

''மாதர்மே மதுகைட பக்னி மஹிஷப்ராணபஹாரோத்யமே
ஹேலா நிர்மத தூம்ரலோசனவதே ஹே சண்டமுண்டாரர்த்தினி
நிசஷுக்ருத ரக்த பீஜ தனுஜே நித்யே நிசும்பாபஹே
சும்பத்வம்ஸினி ஸம்ஹராசு துரிதம் துர்கே நமஸ்தேம்பிகே''

என்ற தியான சுலோகத்தில் கூறியுள்ளபடி, அம்பாள் தன்னை இங்குவந்து ''எலுமிச்சப்பழத்தின்'' மூடிகளில் ராகுகாலத்தில் விளக்கேற்றி வேண்டுவோரின் குறைகளை உடனே தீர்த்து அருள்கிறாள் என்பது கண்கூடாகக் காணும் ஒரு உண்மை. அனுபவித்துப்பார்த்தாலே புரியும்.

பிறகு ஆலயத்தின் வெளியே வருமுன் ஸ்தல விருட்சமாகிய "முல்லைக் கொடியை" தரிசித்து கற்சக்கரங்கள் கொண்ட மண்டபத்தையும் கண்டு வெளிவருகிறோம்.

அம்பாள் சந்நிதி தனியே அழைத்து அருள் கூட்டுகிறது. கோயிலுக்கு வடக்கே நந்தவனத்தை அடுத்து அன்னையின் ஆலயம் அமைதிக்கு உறைவிடமாகக் காணகிறது. "சத்பகூபம்" என்னும் அங்குள்ள கிணற்று நீர் அனேகருக்கு தீராத வியாதிகளுக்கு ஓர் சிறந்த ஔஷதமாக இருக்கிறது என அறிந்தோர் அபிப்பிராயம். இங்கு சந்தன மரங்கள் நன்கு தானாக வளர்கின்றன. அவற்றை யாரும் வைத்துப் பயிர்செய்யவில்லை.

இந்த நந்தவனத்திற்கு தென்கிழக்கில் "கௌதமேஸ்வரர்" என்று பெயரிடப்பட்ட பரமன் லிங்க உருவில் விளங்குகிறார். இவர் மகரிஷி கௌதமரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவர்.

இவரது சந்நிதிக்கு எதிரேதான் அன்னை "கர்ப்பரக்ஷாம்பிகை" சந்நிதி. உள்ளே நுழைகிறோம்.

அன்னையைக் காண்கிறோம். வைத்த கண் வாங்காது அவளையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்கிறது நம் மனம். பார்க்கிறோம், "கருக்காத்த நாயகி" எனப் பெயர்கொண்ட அன்னை சகலரையும் கருவிலேயே காப்பது முதல் காலமுழுதும் காத்திடும் கருணை மனங்கொண்டு கண்குளிரக் காட்சி அளிக்கிறாள்.

அமைதியான முக மண்டலம்; அரும்பும் புன்னகை அமைந்த உதடுகள். காண்போரின் கல்மனத்தையும் கரைத்துக் காலடியில் வீழவைக்கும் கருணைக் கண்கள்; உலகக் குழந்தைகள் அனை வருக்கும் பாலூட்டுவதற்காக ஏற்பட்ட திரண்ட மார்பகங்கள்; துடியிடை; ஸாமுத்ரிகா லட்சணத்திற்கேற்ற துடைகள், ஸகல காரியங்களையும் தனது பாதங்களினாலேயே செய்யும் ஆற்றல் பெற்ற கமலமலர்ப் பாதங்கள்; "பத்ம" பீடத்தின்மீது அம்பாள் நிற்கும் அழகே அழகு!

வலக்கரம் அபயமளிக்கிறது. வயிற்றின்கீழே கருச்சிதைவைத் தடுப்பதைப்போல் வைத்துள்ள இடது கை; மேலே நோக்கியுள்ள

மூன்றுவது வலது கரத்தில் அக்ஷமாலை; இடது கையில் தாமரை மலர். சித்தர்களுக்கெல்லாம் தாயான "சின்மயீ". அவள் தன் பித்தானவர்க்குப் பெரும் பேற்றையருள கற்றைக் குழலழகியாகக் காட்சியளித்து, எழில் நிறை குமரியாகக் காட்சி தருகிருள்.

மிகவும் சிரத்தையுடன் பூசை செய்யும் சிவாச்சாரியார்களின் பக்தியில் மகிழும் அன்னை காண்போரின் உள்ளத்தில் வேருன்றி அருள் பாலிக்கிருள்.

பெண்களுக்கே ஏற்பட்ட ப்ரசவசமய ஆபத்துக்களோ, கர்ப்பச் சிதைவுகளோ கர்ப்பரக்ஷாம்பிகையை வேண்டுவோருக்கு இல்லை என்பது இத்தலத்திலுள்ளோரும், மற்றவரும் கூறும் அனுபவபூர்வ மான உண்மை. இவ்வாலயத்துக்கு வந்து பிரார்த்தித்து, அம்பிகை யின் சந்நிதிக்கு முன்னுல் படியை நெய்யால் மெழுகி கோலமிடும் பெண்கள், கல்யாணமாகாதவராயின் உடன் கல்யாணமாகி விடுவதும், கல்யாணமாகி புத்திர பாக்யமற்றவராஞல் உடன் புத்ர பாக்கியம் ஏற்படுவதும் கண்கூடு. கோயிலில் மந்தரித்துக் கொடுக்கப்படும் விளக்கெண்ணெயைப் பிரஸவ வேதனைப்படும் மாதர்களின் வயிற்றில் தடவ, அவர்கள் சுகப்பிரசவத்தின்மூலமே அழகிய குழந்தைகளைப் பெறுகின்றனர் என்பது உண்மை.

மற்றும், விதி மாற்றும் வித்தகியாகவும், இவ்வுலக வாழ்வில் அவதியுறும் ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைதியான வாழ் வளித்து, ஆதரிக்கும் தாய் "கர்ப்ப ரக்ஷாம்பிகை". எந்தவிதமான பிரச்னைகளும் அன்னையின் முன் அமர்ந்து அமைதியை வேண்டி இவ்வூரில் ஒருநாள் தங்க, வேண்டுவோருக்குச் சாதகமான தர்ம ரீதியான முடிவே ஏற்படுகிறது.

இக்கோயில்கள் முழுவதுமே சோமாஸ்கந்தர் அமைப்பில் அமைந்துள்ளன. தனித்தனியே பிரகாரம் வலம் வருவதைவிட மூன்று கோயில்களையும் சேர்த்துப் பிரதட்சணம் வருவதுதான் முறை என, சில ஆண்டுகளுக்கு முன் இங்கு விஜயம் செய்த காஞ்சிப்பெரியவாள் சொல்லி அவ்வாறே செய்யவும் செய்தார்களாம்.

இப்படிப்பட்ட பரதேவதை திருக்கருகாவூர் வாசிகளுக்கு மட்டும்தான் சொந்தமா? மற்ற ஊர்களிலும், நாடுகளிலும் உள்ள பக்தர்களைக் கூவி அழைக்கிறேன். ஒருமுறை திருக்கருகாவூருக்குச் சென்று அப்பனையும், அன்னையையும் தரிசித்துப் பாருங்கள்! பிறகு உணர்வீர்கள் அவ்ளின் வன்மையையும் இத் தலத்தின் பெருமையையும்!

ஸ்தல புராணம்

ஸ்கந்த புராணத்தில் க்ஷேத்ர பைரவ காண்டத்தில் சனத்குமார சம்ஹிதையில் நாரதருக்கு சனத்குமாரர் அருளியது இந்த ஸ்தல வரலாறு. ப்ரும்ம, கர்க்க மகரிஷி, கௌதமர், குஜத்வஜன், சங்கு கண்ணன், நைத்ருவர், பீமசேனன், புண்ணியத்வஜன், சந்திரன் முதலானோர் பூசித்துப் பேறுபெற்ற தலம்.

வரலாறு

பிரும்மனுக்கு ஏற்பட்ட "நான்" என்ற ஆணவத்தை முன்னிட்டு சிருஷ்டி கைகூடவில்லை. இந்தத் தலத்தில் தவமிருந்து "ப்ரும்ம குண்டமென்னும்" தடாகம் அமைத்து அதன் மேல் கரையில் சிவலிங்கம் அமைத்து இறைவன் திருவருள் பெற்று சிருஷ்டித்தொழில் கைகூடிவரப்பெற்றார்.

கர்க்க மகரிஷி: பிருகுகச்சம் என்ற வனத்தில் தவம் செய்துகொண்டிருந்த கர்க்கரின் முன் நின்ற பைசாசம்தான் கேரளத்தில் பிறந்த சுவர்ணகரன் என்ற வணிகன். மற்றொருவர் சொத்தை மோசம்பண்ணிய காரணத்தால் 21 யுகம் நரகவேதனைப் படுவதாகவும் தன்னைக் கரையேற்ற வேண்டுமென்று வேண்ட, அம்முனிவரும் அப்பைசாசத்துடன் பல தலங்களுக்குச் சென்று வழிபட்டும் பலனில்லாது போகவே, திருக்கருகாவூர் வந்து மார்கழி மாதம் திருவாதிரையன்று பிரும்ம தீர்த்தத்தில் மூழ்கிய பைசாசத்தின் ரூபம் நீங்கி திவ்ய ரூபமடைந்ததைக் கண்டார். பின் அப்பைசாச உருக்கொண்டிருந்த திவ்ய சரீரம் தேவலோகமடைய, கர்க்கரும் தான் முக்தி அடைய வேண்டி முல்லைவன நாதரை வழிபட்ட தலம்.

கௌதமர் : பஞ்சத்தின் காரணமாகப் பல முனிவர்கள் வடநாட்டிலிருந்து தென்னாடு வந்து சோழநாட்டில் கௌதமர் ஆச்ரமத்தில் தங்கிப் பசி நீங்கியிருந்தனர். பல ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் ஊர் திரும்ப விரும்பினர். கௌதமர் மறுக்கவே, முனிவர்கள் ஒரு மாயப்பசுவை சிருஷ்டித்து கௌதமர் வயலில் உள்ள நெல்லை அழிக்க, அது கண்ட கௌதமர் அம்மாயப் பசுவை அழிக்க, அதனாலேற்பட்ட "கோஹத்தி" தோஷம் நீங்கக் கருகாவூரில் மார்கழி மாத ஏகாதசியன்று அமுதகுண்டத்தில் நீராடி ஈசான திக்கில் நூறு விரல்கடையளவில் அபிமுகமாக சிவலிங்க பிரதிஷ்டை செய்து கோஹத்தி நீங்கப்பெற்றார்.

குஜத்வஜன் : இவர் ஒரு நாட்டு அரசன். சத்தியவனம் என்ற காட்டில் வேட்டையாட, அதைக்கண்ட சத்யபதி என்ற முனிவர் காட்டில் வேட்டையாடுவது நல்லதல்ல என, அரசன் மேலும் வேட்டையாடவே, முனிவர் கோபமடைந்து அவனைப் புலியாகும்படி சபித்தார். அரசன் புலி ரூபமடைந்து, சாப நிவாரணம் வேண்டவே, முனிவர் ஆணையின்படி கருகாவூர் அடைந்து, சத்யகூபத்தில் மூழ்கி இறைவனை வழிபட, கார்த்திகை மாத ஞாயிறன்று புலி ரூபம் நீங்கப்பெற்று, இவ்வாலயத் திருப்பணி செய்து இன்பமடைந்தான்.

சங்கு கண்ணன் : குருத் துரோகியான இவ்வந்தணன் பெருநோய் அடைந்து, பின் பிரும்ம தீர்த்தத்தில் நீராடி சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து முக்தியடைந்தான்.

நைத்ருவர் : இவரது மனைவி வேதிகை கருவுற்று இருந்தகாலை இவர் ஒரு யாக நிமித்தம் வருணலோகம் செல்ல அச்சமயம் அங்கு வந்த ஊர்த்வபாத முனிவருக்கு உடல்நிலை சரியில்லாத வேதிகையால் உபசரிக்க முடியவில்லை. இதையறியாத ஊர்த்வபாதர் வேதிகைக்கு ராஜ இட்சு நோயுண்டாகும்படி சபித்தார். (இது காக்காய் வலிப்பு போன்றதொரு அபஸ்மார ரோகம்). நோயின் கடுமையால் வேதிகைக்குக் கருச்சிதைவு ஏற்பட, அவள் அன்னை "கர்ப்பரக்ஷாம்பிகை"யை வேண்ட, அன்னை அவள்முன் தோன்றி அக்கருவை கடத்தில் வைத்துக் காத்தாள். பிறகு அக் கடத்திலேயே வளர்ந்து, குழந்தையாக ஆகி அதை

வேதிகை வளர்த்து வரும்பொழுது இறைவன் தேவலோகத்திலிருந்து காமதேனுவை வரவழைத்து குழந்தைக்குப் பாலூட்டி போஷித்து வரக் கட்டளையிட்டார். சிலநாள் கழித்து தேவலோகம் திரும்பவேண்டிய காமதேனு, தனது குளம்பால் ஒரு தடாகத்தை உண்டாக்கி, அதைத் தனது பாலால் நிரப்பியது. இது ராஜ கோபுரத்திற்கு எதிரில் உள்ளது. குழந்தைககுத் தேவையான காலம்வரை இக்குளத்தில் பாலும், பிறகு நீருமாக இருக்க இறைவன் அருளினார். காமதேனுவின் பிரார்த்தனைப்படி இத் தீர்த்தத்தில் விதிமுறை வழுவாது முழுகுபவர்க்கு மகப்பேறு அருள இறைவனே இசைந்துள்ளதைத் தலபுராணம் விளக்குகிறது. வருணலோகத்திலிருந்து திரும்பிய நைத்ருவர் நடந்ததையறிந்து அன்றுமுதல் கர்ப்பவேதனையால் தீங்கு ஏற்படாமல் இத்தலத்தில் வழிபடும் பெண்டிரைக் காக்கவேண்டுமென இறைவியைத் துதிக்க, இறைவி அருள்புரிந்தாள். இன்றும் ஆமணக்கெண்ணையை மந்தரித்து அருளுகின்றனர் கோயிலில். கருவுற்றது முதல் பிறக்கும் வரை காலன் கையிற் சிக்கியது இவ்வூரில் இதுவரை இல்லை. இத்தலப் பெருமைக்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டு.

பீமசேனன்: மார்கழி மாத ஏகாதசியன்று இவ்வூரில் இறைவனை வழிபட்டு ஏகாதசி விரத பலனடைந்தான்.

புண்ணியத்வசன்: பிசாசு ரூபம் கொண்ட அந்தணன் பிரும்ம தீர்த்தத்தில் நீராடி, இறைவனை வழிபட, அப்பிசாசு உருவம் நீங்கி முக்தியடைந்தான்.

சந்திரன்: தட்ச சாப தோஷம் நீங்க, பங்குனி மாதப் பௌர்ணமியன்று இத்தலத்தில் இறைவனைப் பூசித்து, தோஷம் நீங்கப் பெற்றான். இன்றும் பங்குனி மாதப் பௌர்ணமியன்று இறைவன் திருமேனியில் சந்திரனின் கிரணங்கள் படுவது இதற்கு ஒரு சான்றாகும்.

தீர்த்தங்கள்

(1) *பிர்ம்ம தீர்த்தம்:* ஆலயத்திற்குத் தென்மேற்கு மூலையில் உள்ளது.

(2) *க்ஷீரகுண்டம்:* ராஜகோபுரத்திற்கு முன் உள்ள குளம்.

(3) *சத்யகூபம்:* இரண்டாவது பிரகாரத்தில் உள்ளது.

(4) *விருத்தகாவேரி யென்னும் வெட்டாறு:* ஆலயத்தின் வடபறம் ஓடுகிறது.

பல்லவ கால வேலைப்பாடுகள் உள்ள சிற்பங்கள் நிறைந்த கோவில். கர்ப்ப கிருஹத்தில் உள்ள பூதவரி உயர்ந்த வேலைப்பாடு உள்ளது. சபாமண்டபம் சிற்பம் நிறைந்து அழகிய சக்கரங்களுடன் குதிரை பூட்டியது.

இத்துணை சிறப்பு வாய்ந்த இந்தக் கோயிலில் அறுபத்துமூவர் மூல விக்ரஹங்களைக் கற்சிலையாகச்செய்து பிரதிஷ்டை செய்த பெருமை இக்கோயிலின் முன்னாள் பணியாளர் "மருள் நீங்கியார்" என அழைக்கப்படும் டி. ஜி. வெங்கடாசலம் பிள்ளையினுடையதாகும்.

சமீப காலத்தில் இத்தலத்தில் வழிபட்ட காலஞ்சென்ற பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீட்சதர் அவர்கள், மெய்மறந்து அன்னையைக் குறித்து வடமொழியில் பாடியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அருள் சுரக்கும் அக் கவி அன்னையின் அருள் பெருக்குமென்பதில் ஐயமில்லை.

BOOK-POST



From .

T. S. Gopalan

ROCKFORT DALMIA CEMENT STOCKIST
18, STATION ROAD, PAPANASAM
Thanjavur District

[illegible] BOL
C109 11 B Cross
Thillainagar
Trichy — 18

THILLAINAGAR
23.2.76
8 30 HRS
DELY.

Chettiar & Son, Printers, Kumbakonam